StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM
## SUMMATIVE ASSESSEMENT II - MARCH - 2014

## SUBJECT - TAMIL
## CLASS – IX

Time: 3 Hours | Maximum Marks: 90
நேரம்: 3 மணி | மொத்த மதிப்பெண்கள்: 90

**The question paper is divided into four sections:**
**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| SECTION: A | | Reading comprehension | - | 15 Marks |
| பிரிவு: | அ | படித்தல் (உரைநடைப்பகுதி) | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION: B | | Writing | - | 20 Marks |
| பிரிவு: | ஆ | எழுதுதல் | - | 20 மதிப்பெண்கள் |
| SECTION: C | | Grammar | - | 15 Marks |
| பிரிவு: | இ | இலக்கணம் | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION: D | | Literature/Text Books | - | 40 Marks |
| பிரிவு: | ஈ | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல் | - | 40 மதிப்பெண்கள் |

குறிப்பு :
- கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.
- விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
- வினாக்களின் எண்களை உரிய இடத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

## பிரிவு - அ

**1. கீழ்வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக.** **(5)**

தி. சதாசிவ ஐயர் (1882 - 1950) ஈழத்துத் தமிழறிஞரும், எழுத்தாளரும், புலவரும் ஆவார். சமக்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். காளிதாசரின் இருது சங்காரம் என்னும காப்பியத்தை இருது சங்கார காவியம் என்ற பெயரில் தமிழிலே பாடலகள் எழுதியுள்ளார். மட்டக்களப்பில் வழங்கும் நாட்டார் பாடல்களைத் தொகுத்து வசந்தன் கவித்திரட்டு என்னும் நூலாக வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணம் அளவெட்டியில பிறந்த இவர் கல்வித் துறையில் ஆசிரியராக, தலைமை ஆசிரியராக, பாடசாலைப் பரிசோதகராகப் பணியாற்றி பின்னர் இலங்கையின் வடக்கு, கிழகு மாகாணங்கள் இணைந்த கல்வி மாவட்டத்துக்கு வித்தியாதரிசியாக பணியில் இருந்தார்.

குழந்தைகளுக்காக பிள்ளைப் பாட்டு நூல் வெளிவரவும் ஐயர் உதவினார். 1942 ஆம் ஆண்டு வாக்கில் வெளிவந்த கலாநிதி என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து பணியாற்றியுள்ளார். 1945 இல் சுவதர்மபோதம் என்ற மும்மாத இதழுக்கு ஆசிரியராக இருந்தார். யாழ்ப்பாணத்தில் பல தமிழ் பண்டிதர்களை உருவாக்கிய ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தை நிறுவியதில் முக்கிய பங்காற்றியவர் சதாசிவ ஐயர். தனது சொந்தச் செலவில் சுன்னாகம் கதிரமலை தேவஸ்தானம் எதிரில்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

பிராசீன பாடசாலை என்ற பெயரில் பாடசாலை ஒன்றை அமைத்தார். சதாசிவ ஐயர் சமூகத்துக்கு ஆற்றிய பணிகளை கௌரவிக்குமுகமாக இலங்கை அரசு அவருக்கு முகாந்திரம் என்னும் கௌரவ பட்டத்தை அளித்துச் சிறப்பித்தது.

i) சதாசிவ ஐயர் எந்த ஆண்டு பிறந்தார்?

அ) 1881 ஆ) 1882 இ) 1883 ஈ) 1884

ii) சதாசிவ ஐயர் எந்தெந்த மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்?

அ) சமஸ்கிருதம் ஆ) சமஸ்கிருதம், தமிழ் இ) சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஈ) தமிழ்

iii) சதாசிவ ஐயர் பிறந்த ஊர் எது?

அ) கன்னியாகுமரி ஆ) யாழ்ப்பாணம் அளவெட்டி இ) காஞ்சிபுரம் ஈ) பாண்டிச்சேரி

iv) 'சுவதர்மபோதாம்' என்பது யாது?

அ) மும்மாத இதழ் ஆ) தினப்பத்திரிக்கை இ) நாவல் ஈ) குறுநாவல்

v) இலங்கை அரசு சதாசிவ ஐயருக்கு அளித்த கௌரவ பட்டம் யாது?

அ) பத்ம விபூசன் ஆ) பத்ம பூஷன் இ) பாரத ரத்னா ஈ) முகாந்திரம்

**2. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

நிலா, நிலவு. அம்புலி. திங்கள். மதி. சந்திரன் என்று பலவாறு கூறப்படுகிறது. இலத்தீனில் லூனா என்று அழைக்கப்படும் நிலா, பூமிக்கான ஒரேயொரு இயற்கைத் துணைக்கோளும் சூரியக் குடும்பத்திலுள்ள ஐந்தாவது பெரிய துணைக்கோளும் ஆகும். இரவிலே குளிர்வாக ஒளிதரும் இக்கோளத்தை வானிலே காணலாம். இது பூமியின் ஒரே இயற்கையான துணைக்கோள். இது பூமியைச் சுற்றி வர சராசரி 29.32 நாட்கள் ஆகின்றது. இந்த நிலா பூமியை ஒரு நீள் வட்டப் பாதையில் சுற்றிவருவகிறது. பூமிக்கும் நிலாவுக்கும் சராசரி தொலைவு 384. 403 கி.மீ ஆகும்.

கலைகள் என்பது நிலாவின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அளவாகத் தெரியும் தனித்தனி நிலைகளைக் குறிப்பன. இதனைப் பிறை என்று சொல்வது பெருவழக்கு. முதல் நாள் நிலாவே தென்படாது. இரவு மிக இருட்டாக இருக்கும். இதனை அமாவாசை என்றும் உவா நாள் என்றும் அழைப்பர். பிறகு ஒவ்வொரு நாளும் சிறுகச் சிறுக நிலா, வெளிச்சம் தெரியும் பகுதி பெரிதாகிகொண்டே வரும். இவைகளை இரண்டாம் பிறை. மூன்றாம் பிறை என்றும் இரண்டாங்கலை. மூன்றாங்கலை என்றும் நாட்களைச் சொல்வார்கள். பின்னர் சுமார் 14 நாட்கள் கழித்து ஒரு நாள் முழு நிலா பெரிதாய் வட்ட வடிவமாய்த் தெரியும். இதனை முழு நிலா நாள் என்றும் பௌர்ணமி நாள் என்றும் சொல்வர். பிறகு அடுத்த சில நாட்கள் நிலா சிறுகச் சிறுகத் தேய்ந்து கொண்டே போய். மீண்டும் உவா நாளுக்கான நிலைக்கே திரும்பி விடும். முதலில் முழுநிலா நாள் வரை வளர்ந்து வருவதை வளர்பிறை என்றும். அடுத்த சுமார் 14 நாட்களைத் தேய்பிறை என்றும் அழைப்பர்.



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

i) இலத்தீனில் நிலவின் பெயர் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) அம்புலி ஆ) திங்கள் இ) லூனா ஈ) மதி

ii) நிலா பூமியைச்சுற்றி வர எத்தனை நாட்கள் ஆகும்?

அ) 23.92 ஆ) 29.92 இ) 22.39 ஈ) 29.23

iii) பூமிக்கும் நிலவுக்கும் உள்ள சராசரி தொலைவு எவ்வளவு?

அ) 348,304 ஆ) 384,403 இ) 338,403 ஈ) 343,804

iv) 'உவா' என்றழைக்கப்படும் நாள் எது?

அ) இரண்டாங்கலை ஆ) மூன்றாங்கலை இ) அமாவாசை ஈ) பௌர்ணமி

v) நிலவு தேயும் 14 நாட்களை எவ்வாறு குறிப்பிடுவர்?

அ) கலை ஆ) முழுநிலா இ) வளர்பிறை ஈ) தேய்பிறை

**3. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

உயிர்ச்சத்து (வைட்டமின்) என்பது பெரும்பாலான உயிரினங்களின் இயல்பான வளர்ச்சிக்கும் செயல்பாட்டிற்கும் மிகச்சிறிய அளவில் தேவைப்படும், ஆனால் மிக இன்றியமையாத கரிம நுண்ணூட்டச் சத்து ஆகும். உயிரினத்தால் உருவாக்கப்பட முடியாத அல்லது ஒரு சிறுபகுதி மாத்திரமே உருவாக்கபபடக் கூடிய கரிமச் சேர்மங்களே உயிர்ச்சத்துக்களாகக் கருதப்படுகிறது. இவற்றின் தேவை, உண்ணும் உணவு மூலம் மட்டுமே பூர்த்தி செய்யப்படுகிறது. எனினும் இவற்றை விட அதிகமான அளவில் உயிரினத்திற்குத் தேவைப்படும் சேர்மங்களான கனிமங்கள், கொழுப்பமிலங்கள், முக்கிய அமினோ அமிலங்கள் இவற்றுள் அடங்குவதில்லை.

சில உயிர்ச்சத்துகளை சிறிய அளவில் உயிரினம் உற்பத்தி செய்ய இயலும். உயிர்ச்சத்து 'ஏ' யை பீட்டா கரோட்டினில் இருந்தும், நியாசினை இரிப்டோஃபான் என்னும் அமினோக் காடியில் இருந்தும், உயிர்ச்சத்து 'டி' யை தோல் மீது விழும் புற ஊதா ஒளிக்கதிர் மூலமும் உருவாக்கிக் கொள்ள இயலும். இருப்பினும், உடலுக்குத் தேவையான அளவு இவற்றைப் பெற நல்ல சத்துள்ள உணவு உட்கொள்ளுதல் கட்டாயம் ஆகும். பதின்மூன்று உயிர்ச்சத்துக்கள் இதுவரை உலகளாவிய நோக்கில் அறியப்பட்டுளளது.

i) உயிரினங்களின் மிக இன்றியமையாத கரிம நுண்ணூட்டச்சக்தி எது?

அ) உயிர்ச்சத்து ஆ) கனிமம் இ) அமினோ அமிலம் ஈ) கொழுப்பு அமிலம்

ii) உயிர்ச்சத்துக்கள் எங்கிருந்து கிடைக்கிறது?

அ) உண்ணும் உணவு ஆ) உடை இ) தண்ணீர் ஈ) மற்ற பொருள்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

iii) புற ஊதாக்கதிர் மூலம் உடலுக்குக் கிடைக்கும் உயிர்ச்சத்து யாது?

அ) 'ஏ' ஆ) 'பி' இ) 'சி' ஈ) 'டி'

iv) 'இரிப்டோஃபான்' - இதில் இருந்து கிடைக்கக்கூடிய உயிர்ச்சத்து ________________

அ) நியாசின் ஆ) அமினோக்காடி இ) பீட்டா கரோட்டின் ஈ) உயிர்ச்சத்து 'ஏ'

v) உலகில் இதுவரை அறியபட்டுள்ள உயிர்ச்சத்துக்கள் எத்தனை?

அ) பனிரெண்டு ஆ) பதின்மூன்று இ) பதினான்கு ஈ) பதினைந்து

## பகுதி - ஆ

4. உனது ஊரில் நடைபெற்ற முத்தமிழ் விழா குறித்து உன் நண்பனுக்கு ஓர் கடிதம் எழுதுக 8

அல்லது

உனது ஊரில் அச்சகம் ஒன்று அமைக்க உனது பகுதியின் வட்ட மேலாளருக்கு ஓர் அனுமதி கடிதம் எழுதுக.

* (உமது முகவரி: செல்வன் / செல்வி, 604, காமராசர் சாலை சாலை, பாண்டிச்சேரி 625007 எனக் கொள்க.)

5. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று வரைக. 8

முன்னுரை - மனித நேயம் - உயிரின் முக்கியத்துவம் - இரக்க குணம் - உதவும் மனப்பான்மை - எந்நலமும் தன் நலம் - முடிவுரை

அல்லது

முன்னுரை - தகவல் தொடர்பு சாதனங்கள் - நன்மைகளும் தீமைகளும் - நல்லவற்றிற்கே பயன்படுத்துதல் - முடிவுரை

அல்லது

முன்னுரை - நீரின் இன்றியமையாமை - மழை நீர் சேகரிப்பு - வீண் விரயம் செய்யாமை - செழிப்பான நாடு - வளமான வாழ்வு - முடிவுரை

6. உனது ஊரில் நடைபெற்ற 'மாணவர்களுக்கான உயர்கல்வி கலந்தாய்வு முகாம்' குறித்து ஓர் அறிக்கை எழுதுக. 4

அல்லது

உன் பள்ளியில் நடைபெற்ற 'மாணவர்களுக்கான சதுரங்கப்போட்டி' குறித்து ஓர் அறிக்கை எழுதுக.



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - இ

**7) சான்று தருக. (மூன்று மட்டும்)** 3

**i) இல்பொருள் உவமை அணி**

அ) இருகை யுடைகைக்களிறன்னவன்
ஆ) அவள் அன்னம் போல் நடந்தாள்
இ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது
ஈ) சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்

**ii) பொழிப்பு எதுகை**

அ) அல்லல் அருள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி
ஆ) அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு
இ) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு
ஈ) அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை

**iii) இயற்சீர் வெண்டளை**

அ) பாரி பாரி
ஆ) பலர்புகழ் கபிலர்
இ) அகர முதல
ஈ) யாதானும் நாடாமல்

**iv) மொழி மாற்றுப் பொருள்கோள்**

அ) பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்
ஆ) அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்
இ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது
ஈ) இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தர் துணை

**v) குற்றியலுகரப் புணர்ச்சி**

அ) ஆற்றுப்பாலம்
ஆ) தெள்கு கால்
இ) குரங்கியாது
ஈ) இருப்பாணி



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

StudentBounty.com

**8) நிரப்புக. (எவையேனும் மூன்று மட்டும்)** **3**

**i) நாலசைச்சீர் ____________________ எனவும் வழங்கப்படும்**

அ) ஆசிரிய உரிச்சீர்
ஆ) வஞ்சியுரிச்சீர்
இ) பொதுச்சீர்
ஈ) வெண்பா உரிச்சீர்

**ii) பாவின் ஓசையின்பத்திற்கும் சிறப்பிற்கும் __________________ வேண்டும்**

அ) சீர்
ஆ) தளை
இ) அடி
ஈ) தொடை

**iii) சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, நேரே பொருள் கொள்வது __________________**

அ) ஏகதேச உருவக அணி
ஆ) பிறிது மொழிதல் அணி
இ) வேற்றுமை அணி
ஈ) நிரல் நிரை அணி

**iv) பொருளுக்கேற்பச் சொற்களைக் கூட்டிப் பொருள் கொள்வது _________________**

அ) மொழிமாற்றுப்பொருள்கோள்
ஆ) கொண்டுகூட்டுப்பொருள்கோள்
இ) அளைமறிபாப்புப் பொருள்கோள்
ஈ) தாப்பிசைப் பொருள்கோள்

**v) வரகு + தீது = _________________**

அ) வரகுத்தீது
ஆ) வரத்தீது
இ) வரகுதீது
ஈ) வரஃகுதீது

**9. கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்று மட்டும்)** **3**

**i) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை - அணி எழுதுக.**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை**

அ) சொல்பொருள் பின்வரு நிலையணி
ஆ) எடுத்துக்காட்டு உவமையணி
இ) பிறிது மொழிதல் அணி
ஈ) இல்பொருள் உவமை அணி



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

**ii) கீழ்க்கதுவாய் மோனை - ஒன்றி வரும் சீர்கள் எழுதவும்.**

அ) 1, 3
ஆ) 1, 4
இ) 1, 2, 3
ஈ) 1. 2. 4

**iii) காசு - ஓரசைச்சொல் எழுதுக.**

அ) என்
ஆ) நாடு
இ) படும்
ஈ) உலகு

**iv) பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க - பொருள்கோள் எழுதுக.**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்**

அ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
ஆ) நிரல்நிறைப்பொருள்கோள்
இ) விற்பூட்டுப் பொருள்கோள்
ஈ) அடிமறிமாற்றுப் பொருள்கோள்

**v) குருத்து + ஓலை = ________________ - புணர்ச்சிச் சொல் எழுதுக.**

அ) குருத்து ஓலை
ஆ) குருத்தோலை
இ) குருஓலை
ஈ) குருத்தலை

**10. இலக்கணக்குறிப்பு தருக. (எவையேனும் மூன்று மட்டும்) 3**

**i) நிரை / நிரை / நேர்**

அ) கூவிளங்காய்
ஆ) கருவிளங்காய்
இ) கூவிளங்கனி
ஈ) கருவிளங்கனி

**ii) இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்**
**துன்பம் உறுதல் இலன்**

அ) மோனைத்தொடை
ஆ) எதுகைத்தொடை
இ) முரண்தொடை
ஈ) இயைபுத்தொடை



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**iii) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு**

அ) இல்பொருள் உவமையணி
ஆ) ஏகதேச உருவக அணி
இ) பிறிது மொழிதல் அணி
ஈ) வேற்றுமை அணி

**iv) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு**

அ) மொழிமாற்றுப்பொருள்கோள்
ஆ) அளைமறிபாப்புப் பொருள்கோள்
இ) தாப்பிசைப் பொருள்கோள்
ஈ) விற்பூட்டுப் பொருள்கோள்

**v) பொற்கொடி**

அ) இயல்புப்புணர்ச்சி
ஆ) தோன்றல் புணர்ச்சி
இ) திரிதல் புணர்ச்சி
ஈ) கெடுதல் புணர்ச்சி

**11. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (எவையேனும் மூன்று மட்டும்) 3**

i) அ) எழுத்து தனியாகவோ, பல சேர்ந்தோ ஓசைப்பட அசைந்து நிற்பது சீர் ஆகும்.
ஆ) எழுத்து தனியாகவோ, பல சேர்ந்தோ ஓசைப்பட அசைந்து நிற்பது தளை ஆகும்.
இ) எழுத்து தனியாகவோ, பல சேர்ந்தோ ஓசைப்பட அசைந்து நிற்பது அசை ஆகும்.
ஈ) எழுத்து தனியாகவோ, பல சேர்ந்தோ ஓசைப்பட அசைந்து நிற்பது அடி ஆகும்.

ii) அ) அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது நேரடி ஆகும்.
ஆ) அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது சிந்தடி ஆகும்.
இ) அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது குறளடி ஆகும்.
ஈ) அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது நெடிலடி ஆகும்.

iii) அ) உவமையைக்கூறி உவமேயத்தைப்பெற வைப்பது ஏகதேச உருவக அணி
ஆ) உவமையைக்கூறி உவமேயத்தைப்பெற வைப்பது வேற்றுமை அணி
இ) உவமையைக்கூறி உவமேயத்தைப்பெற வைப்பது பிறிது மொழிதல் அணி
ஈ) உவமையைக்கூறி உவமேயத்தைப்பெற வைப்பது நிரல்நிரை அணி

iv) அ) அடிகள் தோறும் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிப்பொருள் கொள்வது மொழிமாற்றுப்பொருள்கோள்
ஆ) அடிகள் தோறும் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிப்பொருள் கொள்வது கொண்டுகூட்டுப்பொருள்கோள்
இ) அடிகள் தோறும் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிப்பொருள் கொள்வது அடிமறிமாற்றுப்பொருள்கோள்
ஈ) அடிகள் தோறும் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிப்பொருள் கொள்வது அளைமறிபாப்புப்பொருள்கோள்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

v) அ) மெல்லினத்தொடர் குற்றியலுகரங்களுள் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான வல்லினத்தொடராய் முடியும்
ஆ) மெல்லினத்தொடர் குற்றியலுகரங்களுள் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான மெல்லினத்தொடராய் முடியும்
இ) மெல்லினத்தொடர் குற்றியலுகரங்களுள் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான இடையினத்தொடராய் முடியும்
ஈ) மெல்லினத்தொடர் குற்றியலுகரங்களுள் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான மெய் நீங்கும்

## பகுதி - ஈ

**12. கீழ்வரும் பத்தியைப்படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5**

புவனேசுவர் நகரில் 1963 ஆம் ஆண்டில் கூடிய காங்கிரசு மாநாட்டில் காமராசர் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராகப் பதவியேற்றார். அப்பொழுது நாடெங்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கட்சிப்பூசல்களைப் போக்கி, மக்களிடம் நேரடித் தொடர்பு கொண்டார். இரஷ்யாவிற்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று அந்நாட்டுத் தொழில் முன்னேற்றங்களை நேரில் கண்டார். அவற்றை நம் நாட்டிலும் செயல்படுத்த முனைந்தார். இந்தியப் பிரதமர் நேரு 1964 ஆம் ஆண்டில் காலமானார். புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் சிக்கல் எழுந்தது. இவ்வேளையில் லால்பகதூர் சாஸ்திரியைப் போட்டியின்றிப் பிரதமராகத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்தார். சாஸ்திரி எதிர்பாராத முறையில் 1967 ஆம் ஆண்டு தாஸ்கண்டில் உயிரிழந்தார். இவ்வமயம் நேருவின் மகள் இந்திராகாந்தி பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர் எனக் கருதி, அவருக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கினார். அதனாலேயே இந்திராகாந்தி பிரதமரானார்.

செயல்வீரரான காமராசர், அனைத்துக் கட்சியினராலும் மதிக்கப்பெறும் பெருந்தலைவராக உயர்ந்தார். காமராசருக்கு நடுவணரசு பாரத ரத்னா விருது அளித்துச் சிறப்பித்தது. தமிழக அரசு, இவரின் கல்விப்பணியைச் சிறப்பிக்கும் வகையில் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் சூட்டியது. காமராசர் பிறந்த நாளான சூலை 15 ஆம் நாளை ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துள்ளது. இவரைக் கல்விக்கண் திறந்த முதல்வர் எனத் தமிழுழகம் போற்றுகிறது.

காமாராசர், அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராக எந்த ஆண்டு பதவி ஏற்றார்?

அ) 1693
ஆ) 1963
இ) 1696
ஈ) 1936

ii) காமராசர் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட காரணம் யாது?

அ) நாட்டின் தொழில் முன்னேற்றம்
ஆ) நாட்டின் அரசியல் முன்னேற்றம்
இ) நாட்டின் வேலை வாய்ப்பு
ஈ) நாட்டின் சீர்திருத்தம்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

iii) 1967 ஆம் ஆண்டு தாஸ்கண்டில் உயிரிழந்த இந்தியப் பிரதமர் யார்?

அ) இந்திரா காந்தி
ஆ) நேரு
இ) சாஸ்திரி
ஈ) காமராசர்

iv) காமராசருக்கு நடுவணரசு அளித்த விருது யாது?

அ) பத்ம ஸ்ரீ
ஆ) பாரத ரத்னா
இ) அர்ஜீனா
ஈ) ஆஸ்கார்

v) கல்விக்கண் திறந்த முதல்வர் எனப் போற்றப்பட்டவர் யார்?

அ) ராஜாராம்
ஆ) லால் பகதூர்
இ) காமராசர்
ஈ) நேரு

**13. கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதுக. 5**

நோய்க்கு முதல் காரணம் உப்பு. இதனைக் குறைவாகச் சேர்த்தல் நன்று. உப்பு நிறைந்த பொருள்களான ஊறுகாய், அப்பளம், வடாம், கருவாடு, முந்திரிப்பருப்பு, வறுத்த உருளைச் சீவல், வாழைக்காய்ச் சீவல், புளித்த மோர் முதலியனவற்றை முழுவதுமாகத் தவிர்த்தல் வேண்டும். கொழுப்பு நிறைந்த இறைச்சிகள், முட்டையின் மஞ்சள் கரு, தயிர், நெய், வெண்ணெய், பாலாடை, பனிக்கூழ், இனிப்புக்கட்டி ஆகியவற்றை நீக்க வேண்டும். காரமும் புளிப்பும் கொண்ட உணவுகள் கூடாது. எண்ணெயில் வறுத்த, பொரித்த உணவுகளை ஒதுக்குதல் நன்று. நொறுக்குத் தீனி வயிற்றுக்குக் கேடு என்பது பழமொழி. நொறுக்குத் தீனி கூடவே கூடாது. இடையிடையே எதையாவது தின்பது, கொறிப்பது நல்லதன்று.

எளிதில் செரிக்கக் கூடிய பழம், காய், பருப்பு, அரிசி, கோதுமை, பால் இவற்றையே குடல் ஏற்றுக் கொள்கிறது. நாச்சுவை கருதி எவற்றையும் உண்ணாமல் உடல்நலங்கருதி உண்ணுதலே நல்லது. உணவை விரைவாக விழுங்கக்கூடாது. நன்றாக மென்று விழுங்க வேண்டும். அப்போதுதான் வாயிலுள்ள உமிழ்நீர் வேண்டிய அளவு சுரந்து உணவுடன் கலக்கும். உமிழ்நீர் கலக்காத உணவு உள்ளே சென்றாலும் அது செரிக்காது. குடலும் தன் செரிமான ஆற்றலை இழந்து விடும். உணவின் சத்துக்கள் வீணாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். காய்கறிகளை முக்கால் வேக்காட்டில் வேகவைத்து உண்ணவேண்டும். வேகவைத்த காய்கறி நீரில் மிகுதியான சத்துகள் இருப்பதால் அதனை உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

i) நோய்க்கு முதல் காரணமாக அமைந்த உணவுப்பொருள் யாது?

அ) பால்
ஆ) உப்பு
இ) சர்க்கரை
ஈ) புளி



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

ii) உப்பு அதிகம் நிறைந்த உணவுப் பொருள்களுள் ஒன்று

அ) எலுமிச்சை
ஆ) ஆப்பிள்
இ) அப்பளம்
ஈ) தயிர்

iii) ____________________ வயிற்றுக்குக் கேடு என்பது பழமொழி

அ) கோதுமை
ஆ) காய்கறி
இ) பழம்
ஈ) நொறுக்குத்தீனி

iv) உணவை எந்த முறையில் விழுங்க வேண்டும்?

அ) நன்றாக மென்று
ஆ) மெல்லாமல்
இ) அரைத்து
ஈ) முழுதாக

v) காய்கறிகளை எவ்வாறு சமைக்க வேண்டும்?

அ) வேகவைக்காமல்
ஆ) அரை வேக்காட்டில்
இ) முக்கால் வேக்காட்டில்
ஈ) கால் வேக்காட்டில்

**14. கீழ்க்காணும் செய்யுள் வரிகளைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. 4**

கற்றவர் முன்தாம் கற்ற
கல்வியைக் கூறல் இன்பம்
வெற்றியை வாழ்வில் சேர்க்கும்
வினைபல புரிதல் இன்பம்
சிற்றினக் கயவ ரோடு
சேராது வாழ்தல் இன்பம்
பெற்றதை வழங்கி வாழும்
பெருங்குணம் பெறுதல் இன்பம்!

1. நாம் கற்ற கல்வி எப்போது இன்பம் தரும்?

அ) செல்வம் உள்ளவரிடம் கல்வியைக்கூறும் போது
ஆ) அறிவற்றவரிடம் கல்வியைக்கூறும் போது
இ) கற்றவர்முன் கல்வியைக்கூறும் போது
ஈ) கல்லாதவர் முன் கல்வியைக்கூறும் போது



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

2. பெற்ற செல்வத்தை வழங்கி வாழ எத்தகைய குணம் தேவை?

அ) பெருங்குணம்
ஆ) கீழ்க்குணம்
இ) குறுகிய எண்ணம்
ஈ) பேராசை

3. 'சிற்றினக்கயவர்' - யார்?

அ) சான்றோர்
ஆ) கீழ்க்குணமுடையோர்
இ) மேலோர்
ஈ) பெருந்தன்மையுடையோர்

4. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) மீரா
ஆ) பாரதியார்
இ) இராமலிங்கனார்
ஈ) சுரதா

**15. விடையளிக்க (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** **10**

i) மருந்தாகும் உணவுப்பொருள்கள் பற்றி எழுதுக.
ii) காமராசரின் அரசியல் ஈடுபாடுபற்றி எழுதுக.
iii) வள்ளியம்மை குறித்து காந்தியடிகளின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
iv) தமிழர் திருவிழாவின் சிறப்புகளை விவரிக்க
v) ஏறு தழுவுதல் பற்றி விளக்குக.

**16. எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** **8**

i) நல்வினை, தீவினை இவற்றின் பயனாக மணிமேகலை கூறுவன யாவை?
ii) சான்றாண்மை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
iii) பெண்மையின் குணங்களாக இராமலிங்கனார் கூறுவன யாவை?
iv) இறைவனுக்கும் நக்கீரனுக்கும் இடையே நடந்த உரையாடலை விவரிக்க.

**17. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** **8**

i) கீரைகளும் மூலிகைகளே என்பதை விளக்குக.
ii) கிளி சிறைபிடிக்கப்பட்டதை விளக்குக.
iii) முருகனின் நேர்மையை விளக்கி எழுதுக.

**>>>>>>>>>>>>><<<<<<<<<<<<<**



www.StudentBounty.com
Homework Help & Pastpapers